**மாண்புமிகு சார்பு நீதிமன்றம், மானாமதுரை**
**O.S. No. 155 / 2025**

**வா.சா.1 – நேதாஜி 17.04.2026**

**குறுக்கு விசாரணை :-**

பிரதிவாதிகள் வாதி வங்கியில் எந்த தேதியில் கடன் பெற்றார்கள் என்றால் அந்த தேதியில் வாதி வங்கி கிளையில் பணியில் இல்லை. எனக்கு தேதி நேரடியாக தெரியாது ஆவங்களின் அடிப்படையில் சாட்சியம் அளித்துள்ளேன். பிரதிவாதிகள் பெற்ற கடனுக்கு எவ்வளவு சதவீதம் வட்டி என்றால் ஆவணங்களை பார்த்தால் தான் சொல்ல முடியும். வா.சா.ஆ.1 ஆவணம் ஏற்பட்டது எனக்கு நேரடியாக தெரியாது. வா.சா.ஆ.2 முதல் வா.சா.ஆ.4 ஆவணங்கள் எனக்கு நேரடியாக தெரியாது ஆவணங்களை பார்த்தால் தான் சொல்ல முடியும். ஆவணங்களை நான் இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ள விபரம் எனக்கு தெரியும். ஆவணங்களில் உள்ள சரத்துக்களை எனக்கு தெரியுமா என்றால் பல வழக்குகள் உள்ளதால் ஆவணங்களை பார்த்தால் தான் சொல்லமுடியும். இந்திய ரிசர்வ் வங்கி கல்விக்கடனுக்கு 6.5 சதவீதம் வட்டி நிர்ணம் செய்துள்ளது என்றால் சரியல்ல. ரிசர்வ் வங்கி எவ்வளவு வட்டி விகிதம் நிர்ணயித்துள்ளது என்றால் ஒவ்வொரு 6 மாதத்திற்கும் அதற்கான குழு மூலம் வட்டியை நிர்ணயம் செய்யும். அந்த குழுவிற்கு தான் வட்டி விகிதம் தெரியும் என்றால் இல்லை வங்கி மேலாளருக்கும் தெரியும். இந்த வழக்கில் எத்தனை சதவீத வட்டி கோரப்பட்டுள்ளது என்றால் வங்கி கணக்கு பட்டியலை பார்த்தால் தான் சொல்ல முடியும். பொதுவாக கல்விக்கடன் கல்வி முடிந்த பின்பு செலுத்த ஆரம்பிக்க வேண்டும் என்றால் சரிதான். 1ம் பிரதிவாதி அவரது கல்வியை முடிக்கவில்லை என்றால் சரியல்ல. நான் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் 1ம் பிரதிவாதி படிப்பை இன்னும் முடிக்கவில்லை என்றால்

சரியல்ல. 2ம் பிரதிவாதி வயதான நபர் என்றால் ஆவணங்களை பார்த்தால் தான் சொல்லமுடியும். 2ம் பிரதிவாதி விவசாய கூலி வேலை செய்து வருகிறார் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. கடன் வழங்கப்பட்டு 10 ஆண்டுகள் கழித்து தான் இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். இந்த வழக்கு காலாவதி தோசத்தால் பாதிக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ.2 கடன் ஒப்பந்ததத்தில் உள்ள கையொப்பம் இந்த பிரதிவாதிகளின் கையொப்பம் இல்லை என்றால் சரியல்ல. வா.சா.ஆ.2 ஆவணம் வழக்கிற்காக போலியாக உற்பத்தி செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. இந்த வழக்கில் ரிசர்வ் வங்கி விதிமுறைகளின் கீழ் வட்டி விகிதம் கணக்கீடு செய்யவில்லை என்றால் சரியல்ல. இந்த பிரதிவாதிகளுக்கு கடனை திரும்ப கேட்டு அறிவிப்பு அனுப்பப்பட்டுள்ளதா என்றால் இல்லை. அவ்வாறு அறிவிப்பு அனுப்பாமல் பிரதிவாதிகளின் பதில் அறிவிப்பையும் பிரதிவாதிகளின் சூழ்நிலையையும் கருத்தில் கொள்ளாமல் வங்கி தன்னிச்சையாக காலம் கடந்து ஆவணங்களை உற்பத்தி செய்து இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. இந்த வழக்கிற்கும் பிரதிவாதிகளுக்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல. இந்த வழக்கு தள்ளுபடி செய்யக்கூடியது என்றால் சரியல்ல.

சாட்சி திறந்த நீதிமன்றத்தில் என் முன்னால் சாட்சியம் சொல்ல என்னால் கேட்கப்பட்டு தட்டச்சருக்கு கூறி அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டி அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டது

சார்பு நீதிபதி
மானாமதுரை